RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1984

OPEN ACCESS

# வேடர் குடி மாற்றங்களும் பாதீடு அறச்செயலாக்கமும்

**த. பி. பிரபின்ஜோஸ் [அ, *], க.கோ. அனிதாகுமாரி [அ]**

[அ] தமிழ்த்துறை, தெ.தி.இந்துக் கல்லூரி (பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), நாகர்கோவில்-629002, தமிழ்நாடு, இந்தியா

# Changes in Vedar Clan and the Virtue of Sharing

**T.F. Prabin Jose [a, *], K.G. Anitha Kumari [a]**

[a] Department of Tamil, S.T. Hindu College, (Affiliated to Manonmaniam Sundaranar University), Nagercoil-629002, Tamil Nadu, India

* Corresponding Author: josepeniel175@gmail.com

Received: 12-09-2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature is a treasure trove to learn about ancient Tamil society. Sangam literature divides the ancient Tamil society into ‘Agam’ and ‘Puram’. Literary songs of Sangam literature do not belong to the same era. It has been sung by different poets at different times and this is proved by the events described in the literary songs. In Sangam songs explains the remnants of the ethnic groups, who lived in Tamil Nadu. In addition, Sangha literature is a collection of long-term events. Through the Sangam literary songs, we can learn about the life styles of the ethnic groups and the changes they have undergone over time. The most primitive of such ethnic groups are the Vedar clan. Vedar clans were divided into various branches in Tamilnadu and underwent many changes. Although the Vedar’s have splited into many branches, some cultural and moral values still persisted. Virtue of sharing is one among them and they follow it even after their separation. This article examines how this virtue has been continued in spite of various changes that took place from time to time.

**Keywords:** Vedar, Bow, Arrow, Theft, Apportionment

## முன்னுரை

சங்க இலக்கியம் பழமை வாய்ந்த தமிழ்ச் சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஓர் கருவூலமாக காணப்படுகின்றது. பண்டைய தமிழ்ச் சமூகத்தை சங்க இலக்கியம் அகம், புறம் எனப் பிரித்து மக்கள் வாழ்வியலை எடுத்தியம்புகிறது. இத்தகைய சங்க இலக்கியப் பாடல்கள் ஒரே காலத்தைச் சார்ந்தது அல்ல. பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டதாகும். இதனை சங்கப் பாடல்களில் உள்ளமைந்துள்ள நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. சங்கப் பாடல்களில் பண்டைய தமிழக நிலப்பரப்பில் வாழ்ந்த இனக் குழுக்களின் எச்சங்கள் விரவிக்கிடக்கின்றன. அதோடு, இனக் குழுக்கள் முதலாக அரசு உருவாகி நிலவுடைமை சமூக மாற்றம் பெற்ற ஒரு நீண்ட கால நிகழ்ச்சிகளின் தொகுப்பாகச் சங்க இலக்கியம் அமைகிறது. சங்க இலக்கியப் பாடல்களில் இருந்து இனக் குழுக்கள் வாழ்ந்த முறைகள், மற்றும் காலந்தோறும் பெற்ற மாற்றங்களை அறிய முடியும். இத்தகைய இனக் குழுக்களில் மிகவும் பழமை வாய்ந்தவர்கள் வேடர்குடிகள் ஆகும். வேடர்குடிகள் தமிழக நிலப்பரப்பில் காலம் தோறும் பல்வேறு கிளைகளாகப் பிரிந்து மாற்றங்களுக்கு உட்பட்டனர். வேடர் குடிகள் பல கிளைகளாகப் பிரிந்தாலும் சில பண்பாட்டுக் கூறுகள் காலந் தோறும் நீட்சிபெற்றன. அத்தகைய பண்பாட்டில் முக்கியமானது 'பாதீடு' எனும் அறச் செயலாகும். இத்தகைய பாதீடு அறம்,

காலந்தோறும் வேடர் குடிமாற்றங்கள் பெற்ற போதிலும் எவ்வாறெல்லாம் நீட்சி பெற்றது என்பதை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## வேடர்குடி

"மனித குலத்தின் முதல் வாழ்க்கை முறை வேட்டையாடி உணவு சேகரித்தலாகும்" (Bhaktavachal Bharthi, 2018) வேட்டையாடி வாழ்ந்த வேடர் குடி மக்கள் காடு, மலைப்பகுதி சீறூர் குடிசைகளில் வாழ்ந்தனர். காடு, மலைப் பகுதிகளில் வாழ்ந்த விலங்குகளை வேட்டையாடி தங்கள் வாழ்க்கையை நடத்தியவர்கள். விலங்குகளை வேட்டையாட பயன்படுத்திய ஆயுதங்கள் வில் அம்பு ஆகும். இதனை,

“அலந்தலை ஞெமையத்து அதர் அடைந் திருந்த

மால்வரைச் சீறூர் மருள்பல் மாக்கள்

கோள்வல் ஏற்றை ஓசை ஓர்மார்,

திருத்திக் கொண்ட அம்பினர், நோன்சிலை

எருத்தத்து இரீஇ இடம்தொறும் படர்தலின்”

என்கிறது (Seyapal, 2017). மேற்கூறிய பாடல் கரடியை வேட்டையாடுதல் பொருட்டு மக்கள் வில் அம்பினை எடுத்துக்கொண்டு பரவியமையைக் குறிப்பிடுகிறது. வேடர் குடிமக்கள் காடு, மலைகளில் காட்டு மிராண்டித்தனமாக வாழ்ந்தனர். இவர்களுடைய தோற்றமானது அச்சத்தை ஏற்படுத்தக் கூடிய தாகக்காணப்பட்டது.

## பாதீடு

'பாதீடு' என்பதைத் தொல்காப்பியர் வெட்சித் திணை துறைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார்.

“தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடை யென

வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்”

என்கிறது (Elamporanar, 2011). தொல்காப்பியர் கூறிய வெட்சித்திணையின் துறைகள் வேற்றுப் புலத்து ஆநிரைகளைக் கவர்தல் தொடர்பானதாகும். தொல்காப்பியர் கூறியுள்ள பாதீடு துறை பங்கிட்டுக் கொள்ளுதலைக் குறிக்கின்றது. இதிலிருந்து "பாதீடு" என்ற சொல் சமமாகப் பங்கிடுதல் என்ற பொருளைத் தருகின்றது.

## வேடர் குடிச் சமூகத்தில் பாதீடு அறம்

தொல்காப்பியர் பாதீடு அறத்தை வெட்சித் திணையில் ஒரு துறையாகக் கூறியிருந்தாலும், இவ்வறத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பழமை வாய்ந்த வேடர் குடிகள் கடைபிடித்துள்ளனர். காடு, மலைகளில் இருந்து வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியைப் பாதீடு செய்தார்கள். இச்செய்தியினை,

“சேறு கிளைத்திட்ட கலுழ்கண் ஊறல்

முறையின் உண்ணும் நிறையா வாழ்க்கை

முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் - ஆடவர்

உடும்பு இழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்

சீறில் முன்றில் கூறு செய்திடுமார்”

என்கிறது (Balasubramanian, 2017). மேற்கூறிய பாடல் வரிகள் வேடர்கள் வேட்டையாடிய உடும் பினையாவர்க்கும் பங்கிட்டுக் கொடுக்க தீயில் வாட்டிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இச்செய்தி பாதீடு அறம் ஆதிவேடர் குடிகளுக்கே உரித்தானது என்பதைக் காட்டுகின்றது.

## வேடர் குடியின் சமூக பரிணாம வளர்ச்சி

சங்க இலக்கியம் பல்வேறு காலத்தில் பல்வேறு புலவர்கள் இயற்றியமையால் வேடர்குடி சமூகம் ஒவ்வொரு காலகட்டத்திலும் 'எவ்வாறு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது' என்பதை அறிய முடிகின்றது. "குறிப்பாகவில், அம்பு, வேல் முதலான வேட்டைக் கருவிகளைக் கொண்டு வேட்டையால், ஆநிரைக் கவர்தல், ஆறலைத் தல் முதலிய உணவு சேகரிக்கும் முறைகளைக் கையாண்ட வேடர்கள் ஏனைய குறவர், ஆயர் போல வரகு, தினை, ஐவன விவசாயத்திற்கு மாறியதாகத் தெரியவில்லை. இவர்கள் வெட்சி வீரர்களாகவோ, மறக் குடியினராகவோ, வேட்டைத் தலைவர்களாகவோ 'வேந்துவிடு 'தொழில்' மேற்சென்றுபோரிட்டு, வேந்தனிடம் பொருள் அல்லது 'புரவுகோள்' பெற்றவர்களாகவோ மன்னராட்சி சமூக அமைப்புக்கு மாறி கொண்டிருந்தார்கள். வன்புலம், புன்புலம், கரம்பை, அருமிளை, மற்றும் மலைப் பகுதிகளிலிருந்த சீறூர் மன்னர்களாக இவர்களிலிருந்து தலைவர்கள் உருவானார்கள்" அரசு உருவாக்கத்தின் போது வேளாண்மை, மற்றும் வாணிகம் வளர்ச்சி அடைந்தது. இத்தகைய அரசு உருவாக்கத்தில் வேடர்குடி பல்வேறு மாற்றங்களைக் கண்டது. வேடர்குடி பல்வேறு கிளைகளாகப் பிரிந்தது. ஆகிலும் அவர்களுடைய பண்பாட்டுக் கூறுகள் நீட்சி பெற்றுக்கொண்டு இருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. குறிப்பாக வேடர்குடி சமூகம் பயன்படுத்திய தொழிலாயுதம் மற்றும் அவர்கள் பின்பற்றிய பாதீடு அறம் காலந்தோறும் நீட்சி பெற்றுவந்தது. இப்பண்பாட்டு நீட்சியைக் கொண்டு வேடர்குடியின் பரிணாம வளர்ச்சியினால் திரிந்த கிளைக்குடிகள் என்று அறிந்து கொள்ள முடிகின்றது.

## வேடர்குடி-ஆறலைக் கள்வர்கள்

ஆறலைக் கள்வர்கள் சங்க இலக்கிய பாலைத் திணைப்பாடல் வருணனைகளில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வேடர் குடியின் பரிணாம வளர்ச்சியின் ஒரு கிளையே ஆறலைக் கள்வர்கள் ஆவர். இவர்களின் பரிணாம வளர்ச்சியை அறிவதற்கு முன்பாக பாலை நிலச் சூழல் பற்றி அறிவது அவசியமாகும்.

## பாலைநிலம்

தொல்காப்பியர் தொல் தமிழ் நிலப்பரப்பைப் பாகுபடுத்தும் போதுகுறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காக பாகுபடுத்துகிறார். பாலை நிலத்தை தனியாக கூறவில்லை. இதனை,

“அவற்றுள்

நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே”

எனக்கூறுகிறது (Elamporanar, 2011). சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்ட நில அமைப்புகளில் மருதம் மிகவும் செழிப்பான பகுதியாகவும், நெய்தல் கடல் சார்ந்த மிகவும் பசுமையானதாகவும் வருணிக்கப்பட்டுள்ளது பகுதியாகவும், குறிஞ்சி - முல்லை நிலப்பகுதிகள் மழைக்காலங்களில். மழை இல்லாது ஞாயிற்றின் வெம்மை மிகுதியாகக் காணப்பட்ட கோடை காலங்களில் குறிஞ்சி, முல்லை நிலம் பசுமையை இழந்தது. தாவரங்கள் ஞாயிற்றின் மிகுதியான வெம்மை தாங்க முடியாமல் வாடிப்போயின. குறிஞ்சி, முல்லை நிலத்துக்கு வளம் சேர்த்த மலையருவிகள், மற்றும் காட்டாறுகள் வற்றிப்போயின. காடு, மலை சார்ந்த நிலப்பகுதி வெப்பத்தின் தாக்கத்தால் வறண்டு பிளந்தன. இதனை,

“கடுங் கதிர் எறித்த விடுவாய் நிறைய,

நெடுங்கால் முருங்கை வெண் பூத் தாஅய்,

நீர் அற வறந்த நிரம்பா நீள்இடை”

என்கிறது (Seyapal, 2017). குறிஞ்சி, முல்லை நிலம் கோடை காலங்களில் தன்னுடைய வளமான நிலை மாறினாலும், மழைக் காலத்தில் மீண்டும் அதன் பழைய வளமான நிலையைப் பெற்று விடும். இம்மாற்றத்தை விளக்கும் விதமாக,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து

நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிமம் கொள்ளும்"

என்றுகூறுகிறது (Adiarku Nallar, 1920). இவ்வாறாகக் குறிஞ்சியும் முல்லையும் காலச் சூழலுக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே இருப்பதால் தொல்காப்பியர் பாலை நிலத்தைத் தனி நிலமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

## பாலை நில மாற்றத்தில் வேடர் குடிகள்

காடும் மலையும் மழை இல்லாத காலத்தில் பெரும் மாற்றத்தைக் கண்டுள்ளது. ஞாயிற்றின் வெம்மையால் வறண்டு மாற்றம் பெறும் போது, அந்நிலப் பகுதியில் வாழ்ந்த மக்களும் நிலச் சூழல் அமைப்புக்கு ஏற்ப மாறுவது இயல்பாகும் பாலை நிலமாக மாறிய போது மிகுந்த வறட்சியைக் கண்டது. அருவிகள், காட்டாறுகளில் நீர் வற்றும் நிலையில் விலங்குகள் வேற்று நிலப்பகுதிகளுக்குச் செல்லும். குறைவான விலங்குகளே பாலை நிலத்தில் இருந்திருக்க வேண்டும். ஆகவே, வேடர்களுக்கு முன்பு நிலம் குறிஞ்சி, முல்லையாக இருக்கும் போது கிடைத்த வேட்டை இறைச்சியைக் காட்டிலும் குறைவாக கிடைத்திருக்க வேண்டும். இதனால் வேடர்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வேடர்களுக்கு ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையை மெய்பிக்கும் விதமாக எறும்புகள் சேகரித்து வைத்திருந்த புல்லரிசியைச் சாப்பிட்டனர். இச்செய்தியை,

“கோடை நீடலின் வாடுபுலத்து உக்க

சிறுபுல் உணவு, நெறிபட மறுகி,

நுண்பல் எறும்பி கொண்டு அளைச் செறித்த

வித்தா வல்சி, வீங்கு சிலை, மறவர்”

என்கிறது (Seyapal, 2017). எறும்பு சேகரித்து வைத்திருந்த புல்லரிசியை மக்கள் சாப்பிட்ட நிகழ்வு பாலை நிலவறுமையை எடுத்துக்காட்டுகிறது. பாலை நில மாற்றத்தின் போது ஏற்பட்ட உணவுப் பற்றாக் குறையினால் பலர்நிலத்தை விட்டுவெளியேறினர். ஞாயிற்றின் வெம்மையைத் தாங்கி வாழ்ந்த மக்கள் கள்வர்களாக மாறினர். இவர்கள் முன்பு காடு, மலைகளில் வாழ்ந்த காலத்தில் விலங்குகளை வேட்டையாடும் போது இரக்கமின்றி காட்டு மிராண்டித்தனமாக செயல்பட்டனர். இத்தகைய இரக்கமற்ற செயல் பாலை நில மாற்றத்தின் போது களவுத் தொழிலிலும் பிரதிபலித்தது. வேடர் குடிகள் வேட்டையின் போது பயன்படுத்தியவில், அம்பையேகள் வராக மாறிய போதும் பயன்படுத்தினார்கள். ஆறலைக் கள்வர்வில், அம்பு பயன்படுத்தியதை,

"கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டு ஆடும்

வில் ஏர் உழவர் வெம் முனைச் சீறூர்ச்

சுரன்முதல் வந்த உரன் மாய் மாலை

உள்ளினென் அல்லெனோ, யானே"

என எடுத்துரைக்கிறது (Balasubramanian, 2018).

## ஆறலைக் கள்வர்களின் களவும், பாதீடும்

பாலை நில வறட்சியின் நிமித்தம் ஏற்பட்ட வறுமையின் விளைவாக ஆறலைக் கள்வர்கள் களவுத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுடைய உணவுக்காக, முல்லை நிலம் சார்ந்து ஆநிரைகளின் பால்படு பொருள்களைக் கொண்டு தங்கள் வாழ்வை நடத்திக் கொண்டிருந்த கோவலர்களிடம் இருந்து ஆநிரைகளைக் களவு செய்தனர். ஆநிரையைக் கொன்று அதன் இறைச்சியைக் கனவில் சுட்டு சாப்பிட்டனர். இதனை,

"இன்சிலை எழில்ஏறு கெண்டி, புரைய

நிணம்பொதி விழுத்தடி நெருப்பின் வைத்துஎடுத்து,

அணங்குஅரு மரபின் பேஎய் போல

விளர் ஊன் தின்ற வேட்கை நீங்க,

துகள்அற விளைந்த தோப்பி பருகி,

குலாஅ வல்வில் கொடு நோக்கு ஆடவர்"

என்கிறது (Seyapal, 2017). ஆறலைக் கள்வர்கள் திருடிய ஆநிரைகளை வளர்த்து அதன் பால்படு பொருள்களைக் கொண்டு தங்கள் வாழ்க்கை நடத்தவில்லை. மாறாக, பூர்வீக வேடர் குடிகள் எவ்வாறு இறைச்சியை உணவாக பயன்படுத்தினார்களோ அதன் தொடர்ச்சியே ஆறலைக் கள்வர்களும் இறைச்சியைச் சுட்டுத்தின்ற நிகழ்வு அமைகிறது. ஆறலைக் கள்வர்கள் ஆநிரைத் திருட்டோடு நிறுத்தவில்லை. பாலை நிலம் வழியாகச் செல்லும் புதியவர்கள், வணிகச்சாத்துக்கள் போன்றோரிடமும் பொருள் கொள்ளையில் ஈடுபட்டனர். வணிகர்களிடம் ஆறலைக் கள்வர்கள் கொள்ளையிட்டதை,

“சேக்குவம் கொல்லோ, நெஞ்சே! சாத்து எறிந்து

அதர்கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்

கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ”

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது (Seyapal, 2017). ஆறலைக் கள்வர்கள், கோவலர்கள், பாலை வழி செல்லும் புதியவர்கள், மற்றும் வணிகர்கள் போன்றோரிடம் இருந்து திருடிய பொருட்களை ஒருவர் மட்டும் தனி உடைமையாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆதிவேடர் குடி பின்பற்றிய பாதீடு அறத்தையே பின்பற்றியுள்ளனர். ஆறலைக் கள்வர்கள் பிறர் பொருளைத் திருடிய நிகழ்வு தங்கள் பசியின் நிமித்தமாக நிகழ்ந்தது. ஆனாலும் திருடிய பொருளைத் தான் சார்ந்திருக்கும் குழுவாக பங்கிட்டுக் கொண்ட நிகழ்வு உயர்ந்த பண்பை வெளிப்படுத்துகின்றது.

## குறு நில மன்னர்களிடம் பாதீடு

வேடர் குடிகளின் பரிணாம வளர்ச்சியின் அடுத்தொரு கிளையாக வேடர் குடிகளுக்குள்ளே தலைமை உருவாகத் தொடங்கியது. குறிப்பாக, "வன்புலம், புன்புலம், கரம்பை, அருமிளை, மற்றும் மலைப் பகுதிகளிலிருந்த சீறூர் மன்னர்களாக இவர்களிலிருந்து தலைவர்கள் உருவானார்கள்" இத்தகு தலைமையின் கீழ் வீரர்களும் இயங்கத் தொடங்கினர். தலைவன் ஏவ, வீரர்கள் நிறைவேற்றுபவர்களாக காணப்பட்டனர். இதனை,

“சில் பரிக் குதிரை, பல் வேல் எழினி

கெடல் அருந் துப்பின் விடுதொழில் முடிமார்,

எரி நடந்த கல் காய் கானத்து

வினை வல் அம்பின் விழுத் தொடை மறவர்

தேம் பிழி நறுங் கள் மகிழின், முனை கடந்து,

வீங்கு மென் சுரைய ஏற்றினம் தரூஉம்"

என்கிறது (Seyapal, 2017). மேற்கூறிய பாடலில் எழினி எனும் தலைவன் ஏவ வீரர்கள் தொழிலை முடிக்கும் பொருட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வருதலைக் குறிப்பிடுகின்றது. இச்செயல் சிறுநிலப்பகுதிகளில் தலைவன் உருவாகியதை வெளிப்படுத்துகின்றது. குறு நிலங்களில் தோன்றிய தலைவர்கள் வேடர் குடிகளின் வழி வந்தவர்கள் என்பதற்கு சான்றாக,

"மான் கணம் தொலைச்சிய குருதி அம் கழற் கால்,

வான் கதிர்த் திருமணி விளங்கும் சென்னி

செல்வத் தோன்றல், ஓர் வல்வில் வேட்டுவன்

தொழுதனென் எழுவேற் கை கவித்து இரீஇ,

இழுதின் வால் நிணக் கொழுங்குறை,

கான் அதர் மயங்கிய இளையர் வல்லே

தாம் வந்து எய்தா அளவை, ஒய்யெனத்

தான் ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, நின்

இரும் பேர் ஒக்கலொடு தின்ம்' எனத்தருதலின்,

அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி"

என்கிறது. மேற்கூறிய பாடல் தோட்டிமலை தலைவன் நள்ளி, பலா மரத்தடியில் அமர்ந்திருந்த புலவனுக்கு தான் வேட்டைக்கு சென்று பிடித்த மானின் தசையை தீயில் வாட்டி பசியாற சாப்பிடக் கொடுத்ததை அறிய முடிகின்றது. நள்ளி மலைத் தலைவனாகக் காணப்பட்ட போதிலும், அவனுடைய வேட்டைத் தொழில் வேடர் குடியின் வழித்தோன்றல் என வெளிப்படுத்துகின்றது. மேலும், வேடர் குடி பின்பற்றுகின்ற பாதீடு அறமும் நள்ளியிடம் வெளிப்பட்டுள்ளது (Balasubramanian, 2018).

## அரசு உருவாக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

பண்டைய தமிழ்ச்சமூகத்தில் பெரும் அரசுகள் தோற்றம் பெற வேளாண்மை தொழில் வளர்ந்து முக்கியத்துவம் பெற்றது. வேளாண்மை பொருள்களில் கிடைக்கப்பெற்ற உபரி பொருட்கள் கொண்டு வாணிகம் மேற்கொண்டனர். இத்தகைய மூவேந்தர் அரசு உருவாக்கத்தின் போது தமிழ்ச்சமூகத்தில் பெரும்மாற்றம் ஏற்பட்டது. சீறூர் தலைவர்கள், குறுநில மன்னர்கள் நலிவடைய தொடங்கினர். "இக்கால கட்டத்தில் வேந்தர் நாட்டின் பரப்பு விரிவடைந்தது. வேளிரும் மன்னரும் வேந்தரின் கீழ் தங்கள் குடிகளிடம் வரி வாங்கும் காணியாளராய் விளங்கினர். வேந்தர் எழுச்சிக்கு முன் வேளிரும் மன்னரும் சுயாட்சி பெற்ற தொல் குடித்தலைவர்களாக விளங்கினர். ஆனால் வேந்தர் எழுச்சிக்குப்பின் வேளிரும் மன்னரும் வேந்தர் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர்" சில குறுநில மன்னர்கள் வேந்தர்களை எதிர்த்த நிலையில் வேந்தர்களால் அடக்கி ஆளப்பட்டனர் (Poongundran, 2019). இதற்கு சான்றாக,

"மூதிர் பெண்டிர் கசிந்து அழ, நாணி,

கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை

எழுவர் நல் வலம் கடந்தோய்!"

அமைகிறது. இப்பாடல் வரிகளில் குறிப்பிட்ட எழுவரில் ஐவர் குறுநில மன்னர்கள் ஆவர். ஐந்து குறு நில மன்னர்களைப் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தில் வைத்து தோற்கடித்தான். இச்செயல் வேந்தர்களால் குறுநில மன்னர்கள்அடக்கி ஆளப்பட்டதை எடுத்துரைக்கின்றது (Balasubramanian, 2018).

## அரசு உருவாக்கத்தில் பாதீடு

வேந்தர்களின் எழுச்சிக்குப் பிறகு தொல் குடித்தலைவர்கள் வேந்தரின் ஏவல் தொழில் செய்தனர். குறிப்பாக பகைநாட்டு அரசனின் நிலம் சார்ந்து வளர்க்கப்பட்ட குடிகளின் ஆநிரைகளைக் கவர்ந்து வர தொல்குடி தலைவர்களிடம் ஏவினர். அரசின் ஆணையை நிறை வேற்றும் பொருட்டு தொல் குடிதலைவர்கள் தங்கள் வேட்டை ஆயுதங்களான, வில், அம்புகளை எடுத்துக்கொண்டு பகைவர் நாட்டுப் புலங்களுக்கு சென்றனர். வேற்றுப் புலங்களில் வளர்க்கப்பட்ட கொழுத்த ஆநிரைகளைத் தொல்குடி தலைவர்கள் மற்றும் மறவர்கள் கவர்ந்து, அரசனும் மக்களும் கூடியிருந்த மன்றங்களில் நிறுத்தப்பட்டன. ஆநிரைகளைக் கவர்ந்து வந்த தலைவன் மற்றும் வீரர்களை வெட்சி வீரர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆநிரைகளைக் கவரச் செல்லும் போது வெட்சிப் பூவை தலையில் சூடி சென்றமையால் இப்பெயர் அமைகிறது. மன்றத்தில் நிறுத்தப்பட்ட ஆநிரைகளை வேந்தன் போரின் போது உதவியவர்கள், மற்றும் தன்னாட்டு குடிகளுக்குப் பகிர்ந்தளித்தான். இத்தகைய நல்லறம் வேடர்குடி சமூகம் கடைபிடித்த பாதீடு அறம் சார் பண்பாடு எனவெளிப்படுத்துகிறது. மேலும், இத்தகைய பாதீடு அறம் மூவேந்தர்களின் ஆட்சியின் போது ஆநிரைகள் மட்டுமல்லாமல் பல்வேறு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டு பாதீடு அறம் விரிவடைந்தது.

## முடிவுரை

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் ஆதி குடிகள் வேடர்குடி ஆகும். வேடர்குடி ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. இதனை பல்வேறு காலத்தில், பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்டடு, தொகுக்கப்பட்ட சங்க இலக்கிய நூல்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது. சங்க இலக்கியப் பாடல்களில் வேடர்குடி சமூகம் முதலாக வேந்தர் அரசு உருவாகி வளர்ந்த காலகட்டம் வரையிலான பதிவுகள் ஏராளமாக கிடைக்கின்றன. இப்பதிவுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் வேடர்குடி சமூகம் பல்வேறு கிளைகளாகப் பிரிந்ததை அறிய முடிகின்றது. ஆறலைக் கள்வர்கள், சீறூர் தலைவர்கள், குறுநில மன்னர்கள் என பல கிளைகளாக பிரிந்து பரிணாமவளர்ச்சியைக் கண்டுள்ளது. வேடர்குடி ஆறலைக் கள்வர்களாக மாறியமைக்கு பாலை நிலச் சூழல் காரணமாக அமைந்துள்ளது. குறு நில மன்னர்கள் வேடர்க் குடி தலைமை நிமித்தமாக உருவாகியிருக்க வேண்டும். ஆறலைக் கள்வர்கள், சீறூர் தலைவர்கள், குறு நில மன்னர்கள் ஆகியோர் பயன்படுத்திய ஆயுதங்களானவில் அம்புகளில் ஒற்றுமை காணமுடிகின்றது. மேலும் பாதீடு அறமும் பண்பாட்டு நீட்சியாகத் தொடர்ந்துள்ளது. அரசு உருவாக்கத்தின் போது தொல்குடி தலைவர்கள் மற்றும் மறவர்கள் வேந்தர்களின் ஏவல் தொழில் செய்பவராக மாறினர். வேந்தன் ஆநிரை கவர்ந்துவர தொல்குடி தலைவர் மற்றும் மறவர்களை ஈடுபடுத்திக் கவர செய்தான். ஆநிரை கவரச் சென்ற தலைவன் மற்றும் வீரர்கள் தலையில் வெட்சிப் பூவை சூடி போருக்குச் சென்றமையால், வெட்சி மறவர் என்று பெயர்பெற்றனர். மேற்கூறிய கருத்துகளின் மூலமாக வேடர்குடி பல்வேறு கிளைகளாகப் பிரிந்து பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

## References

Adiarku Nallar, (1920) Silappatikaram, Commercial Gallery, Chennai, India.

Balasubramanian, (2017) Purananooru, New Century Book House, Chennai, India.

Balasubramanian, (2018) Natrinai, New Century Book House, Chennai, India.

Bhaktavachal Bharthi, (2018) Tamilaga Pazankudigal, Adaiyalam Publications, Trichy, India.

EIamporanar, (2011) Tholkapiyam Porulathikaram, Saratha Puplication, Chennai, India.

Poongundran, R. (2019) Tolgudi Velir Vender, (Second Edition) New Century Book House, Chennai, India.

Seyapal, R. (2017) Agananooru, New Century Book House Pvt.Ltd., Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License